**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 206/2022**

**வா.சா. 1 – சொரிமுத்து**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 20.09.2025.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

ரேகாவை பலவந்தமாக வீட்டை விட்டு காலிசெய்ததால் ஈத்தாமொழி காவல்நிலையத்தில் என் மீது புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஈத்தாமொழி காவல்நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரின் மீதான முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் இருப்பது எனது பேத்தியின் குடும்பம் என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் எங்கே எடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் வழக்கு பட்டிகை வீட்டில் எடுக்கப்பட்டது. மேற்படி புகைப்படத்தில் கதவு எண் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றா' பிரதிவாதி டிரெஸ்டின் தலைவர் மேற்படி புகைப்படத்தில் காணப்படுவதால் மேற்படி புகைப்படம் வழக்கு பட்டிகை வீட்டில் எடுக்கப்பட்டது.

மேற்படி புகைப்படத்தில் வழக்குபட்டிகை வீட்டின் அமைப்புகள் காணப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்ற விபரம் புகைப்படத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 புகைப்படத்திற்கும் வழக்கு பட்டிகை வீட்டிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 சங்கரவடிவு என்பவரின் குடும்ப அட்டையில் 31/61 என்று கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பழைய கதவு எண். புதிய கதவு எண் கொண்ட குடும்ப அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.13 எனது ஆதார் அட்டை 2000 க்கு பிறகு எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. புதிய கதவு எண்ணும் 2000 க்கு பின்பாக தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆதார் அட்டையிலும் 31/61 என்று கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் எப்போது காலஞ்சென்றார் என்றால் 07.10.1984 ல். வா.சா.ஆ.14 என் தந்தையின் இறப்பு சான்றிதழில் 29/69 ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 குடும்ப அட்டையில் உள்ள கதவு எண்.54/89 ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.15 க்கும் வழக்கு பட்டிகை சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.16 கடிதத்தில் சந்தாணம் பிள்ளையின் வாரிசுகளில் நானும் ஒருவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சந்தாணம் பிள்ளைக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று. மேற்படி வாரிசுகளை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் எங்கள் பொறுப்பில் விட்டு விட்டதால் கட்சி சேர்க்கவில்லை. வா.சா.ஆ.16 வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 வழக்கு பட்டிகை வீடு எனது பெயரில் பஞ்சாயத்து தலைவர் மாற்றி தராததால் புகார் அளித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் கடிதம் என்றால் சரியல்ல. சிபி என்பவர் எனது மருமகள். வா.சா.ஆ.18 புகார் எனது மருமகள் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் வழக்கு பட்டிகை வீட்டில் சிபி தான் தாமசித்து வந்தார் என்றால் சரிதான். எனது மருமகள் சிபி தான் வழக்கு பட்டிகை சொத்தில் தாமசித்து வந்த விபரத்தை வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.18 யை காவல் நிலையத்தில் கொடுத்ததற்கான ரசீது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18 யை வழக்கிற்காக தயாரித்து

போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19 யை 25.03.2021 தேதியிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.19 ன் கதவு எண்.54/89 ஏ யில் தாமசித்து வந்த சங்கரவடிவிற்கு மூன்று வாரிசுகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.20 ரசீதுகள் எந்த கட்டிடத்திற்கானது என்பதோ எந்த மீட்டர், கதவு எண். மற்றும் வீட்டு உரிமையாளரின் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20 க்கும் வழக்கு பட்டிகை சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.21 சமுதாய டிரெஸ்டின் தீர்மானத்தின் படிவிலை நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரிதான் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது நாங்கள் பணம் இல்லாததால் வாங்கவில்லை.

வா.சா.ஆ.21 சமுதாய டிரெஸ்டின் தீர்மானத்தின் படி நாங்கள் வாங்க முற்படாததால் தரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.22 அது சம்மந்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.23 ஆவணம் 50 சென்ட் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ன் படி மின்சார வாரியத்திற்கு கொடுக்கப்பட்ட புகாருக்கு வீட்டினுடைய உரிமை சம்மந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்தால் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். வட்டார வளர்ச்சி அலுவலர் பஞ்சாயத்து உதவி இயக்குநர், துணை வட்டார வளர்ச்சி அலுவர் ஆகியோர் எனது ஆவணம் வா.சா.ஆ.4, 5, 6 மற்றும் 7 ன் படி உரிமை சம்மந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்தால் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று கேட்டார்கள் என்றால் சரிதான். பட்டிகை சொத்தின் கட்டிடத்தின் வரி விதிப்பு ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி டிரெஸ்டு பெயரில் உள்ளது என்றால் இரண்டு வருடமாக மாற்றி வைக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதி பெயரில் இருப்பதாக கூறக்கூடியதை ரத்து செய்யகோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை வீட்டின் எனது வீட்டின்

எனது உரிமையை விளம்புகை கோரி பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விளம்புகை பரிகாரம் கேட்கப்படாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 சங்கரவடிவு பெயரிலான ரசீது வழக்கு தாக்கல் செய்த பின் 12.03.2021 ல் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 சங்கரவடிவு பெயரிலான ரசீது யார் வாங்கியது என்றால் என் அம்மா வாங்கியது. வா.சா.ஆ.10 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை வீடு எனது கைவசம் திருப்பி தரகோரி பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அனுபவத்தை ஒப்படைக்க கோரி கேட்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**